Crl.Misc/39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
VALANGAIMAN

Calendar
Miscellaneous **Case No. CC. 44/2025**
Preliminary Register

Deposition of **PW-5 LW-6**

| Name | : | அன்பழகன் | Father Name | : | மணி |
|---|---|---|---|---|---|
| Village | : | புளியக்குடி | Taluk | : | வலங்கைமான் |
| Calling | : | விவசாயி | Age | : | 43 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 06th day of April 2026. Accused present.

சாட்சி வலங்கைமான் காவல் நிலையம் தலைமைக்காவலர் திரு.R.கல்யாணசுந்தரம் என்பவரால் அடையாளம் காட்டப்பட்டுள்ளார். எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். 2025ம் வருடம் ஜுன் மாதம் தேதி ஞாபகமில்லை. காலை 11.00-11.30 மணியளவில் பாப்பாத்தி அம்மன் கோவில் அருகே இருந்த போது அங்கு வந்த போலீசார் விபத்து சம்மந்தமாக வரைபடம் தயார் செய்தார்கள். சாட்சியாக நான் கையொப்பம் செய்தேன். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது எத்தனை பக்கம் எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். கையெழுத்தை காவல் நிலையத்தில் வைத்து போலீசார் பெற்றுக்கொண்டார்கள் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.04.06 14:38:55 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE VALANGAIMAN

Calendar
Miscellaneous **Case No. CC. 44/2025**
Preliminary Register

Deposition of **PW-4 LW-5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | குமார் | Father Name | : | மாரியப்பன் |
| Village | : | கீழஅமராவதி | Taluk | : | வலங்கைமான் |
| Calling | : | விவசாயி | Age | : | 46 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 06th day of April 2026. Accused present.

சாட்சி வலங்கைமான் காவல் நிலையம் தலைமைக்காவலர் திரு.R.கல்யாணசுந்தரம் என்பவரால் அடையாளம் காட்டப்பட்டுள்ளார். எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் மேற்படி முகவரியில் வசித்து ஆட்டோ ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். 2025ம் தேதி மாலை 05.00-05.30 மணியளவில் பாப்பாத்தி அம்மன் கோவில் அருகே இருந்த போது அங்கு வந்த போலீசார் விபத்து சம்மந்தமாக வரைபடம் தயார் செய்தார்கள். சாட்சியாக நான் கையொப்பம் செய்தேன். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். **அந்த கையொப்பம் அ.த.சா.ஆ.2ஆககுறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது எத்தனை பக்கம் எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். கையெழுத்தை காவல் நிலையத்தில் வைத்து போலீசார் பெற்றுக்கொண்டார்கள் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.04.06 14:39:04 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE VALANGAIMAN

Calendar
Miscellaneous
Preliminary Register

**Case No. CC. 44/2025**

Deposition of **PW-3 LW-4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கோவிந்தராஜ் | Father Name | : | காளிதாஸ் |
| Village | : | கீழஅமராவதி | Taluk | : | வலங்கைமான் |
| Calling | : | ஆட்டோ ஓட்டுநர் | Age | : | 35 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 06th day of April 2026. Accused present.

சாட்சி வலங்கைமான் காவல் நிலையம் தலைமைக்காவலர் திரு.R.கல்யாணசுந்தரம் என்பவரால் அடையாளம் காட்டப்பட்டுள்ளார். எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

<u>முதல் விசாரணை-</u>

நான் மேற்படி முகவரியில் வசித்து ஆட்டோ ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். அ.சா.1 காமராஜை தெரியும். சுமார் 7-8 மாதங்களுக்கு முன்பு சென்ற வருடம் தேதி மாதம் ஞாபகமில்லை. காலை 09.15 மணிக்கு பாப்பாத்தி அம்மன் கோவில் பக்கத்தில் நான் இருந்த போது Tata indica car வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்து அ.சா.1 மகன் திருநாவுக்கரசு கிழக்கிலிருந்து மேற்காக நடந்து வந்தார். காரில் அடிப்பட்டு கீழே விழுந்துவிட்டார். காயம்பட்டவரை ஆலங்குடி அரசு மருத்துவமனையில் முதல் சிகிச்சை செய்து விட்டு

மேல்சிகிச்சைக்காக கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். ஆஜர் எதிரி தான் காரை ஓட்டி வந்த நபர். போலீசார் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

வலங்கைமான் - நீடாமங்கலம் செல்லும் ரோடு வடக்கிலிருந்து தெற்கு நோக்கி செல்லும் ரோடு என்றால் சரிதான். பாப்பாத்தி அம்மன் கோவிலுக்கு செல்ல வேண்டும் என்றால் ரோட்டை குறுக்காக கடந்து தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு ரோட்டை கடக்கும் போது தான் அ.சா.1ன் மகன் திருநாவுக்கரசு தடுமாறி கீழே விழுந்து விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.06 14:39:13 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 44/2025**

Preliminary Register

Deposition of **PW-2 LW-3**

| Name | : | மணிகண்டன் | Father Name | : | திருநாவுக்கரசு |
|---|---|---|---|---|---|
| Village | : | கீழஅமராவதி | Taluk | : | வலங்கைமான் |
| Calling | : | வெல்டிங் வேலை | Age | : | 46 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 06th day of April 2026. Accused present.

சாட்சி வலங்கைமான் காவல் நிலையம் தலைமைக்காவலர் திரு.R.கல்யாணசுந்தரம் என்பவரால் அடையாளம் காட்டப்பட்டுள்ளார். எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

<u>**முதல் விசாரணை-**</u>

நான் மேற்படி முகவரியில் வசித்து வெல்டிங் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். கடந்த 11.06.2025ம் தேதி காலை 09.00 மணிக்கு அமராவதியில் உள்ள ஒரு உணவகத்தில் சாப்பிடுவதற்காக நடந்து சென்று கொண்டிருந்தேன். அப்போது அ.சா.1ன் மகன் திருநாவுக்கரசு பாப்பாத்தி அம்மன் கோவில் அருகே காரில் அடிப்பட்டு கிடந்ததை நான் சென்று பார்த்தேன். எதிரி ஓட்டி வந்த வாகனம் Tata indica car ஆகும். காரை ஓட்டி வந்த நபர் பெயர் கார்த்திகேயன் ஆஜர் எதிரி தான் அவர். காயம்பட்ட திருநாவுக்கரசை காரில் அழைத்துக்கொண்டு ஆலங்குடி அரசு மருத்துவமனையில் முதல் சிகிச்சைக்கு

செய்து விட்டு மேல்சிகிச்சைக்காக கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

போலீசார் விசாரணையில் அமராவதியில் உள்ள ஒரு உணவகத்தில் சாப்பிடுவதற்காக நடந்து சென்று கொண்டிருந்தேன் என்று கூறவில்லை என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் நான் கூறியுள்ள " காரை ஓட்டி வந்த நபர் பெயர் கார்த்திகேயன் ஆஜர் எதிரி தான் அவர். காயம்பட்ட திருநாவுக்கரசை காரில் அழைத்துக்கொண்டு ஆலங்குடி அரசு மருத்துவமனையில் முதல் சிகிச்சைக்கு செய்து விட்டு மேல்சிகிச்சைக்காக கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன் " என்று போலீசார் விசாரணையில் கூறவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 காமராஜ் எனது தெருக்காரர் என்றால் சரிதான். அவரும் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க எதிரி குறித்தும் சம்பவம் குறித்தும் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN Digitally signed by JESU BALAN Date: 2026.04.06 14:39:23 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 44/2025**

Preliminary Register

Deposition of **PW- 1 LW -1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | காமராஜ் | Father Name | : | ரெத்தினம் |
| Village | : | கீழஅமராவதி | Taluk | : | வலங்கைமான் |
| Calling | : | ஆட்டோ ஓட்டுநர் | Age | : | 48 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 06th day of April 2026. Accused present.

சாட்சி வலங்கைமான் காவல் நிலையம் தலைமைக்காவலர் திரு.R.கல்யாணசுந்தரம் என்பவரால் அடையாளம் காட்டப்பட்டுள்ளார். எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் மேற்படி முகவரியில் வசித்து ஆட்டோ ஓட்டுநராக தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியும் நானும் ஆட்டோ ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறோம். கடந்த 11.06.2025ம் தேதி காலை 09.00 மணிக்கு சாட்சி மணிகண்டன் என்பவர் எனக்கு போன் செய்து வலங்கைமானிலிருந்து மன்னார்குடி செல்லும் சாலையில் கீழஅமராவதி என்ற இடத்தில் என் மகன் திருநாவுக்கரசு காரில் அடிப்பட்டு விட்டதாக என்னிடம் கூறினார். அவர் உடனே திருநாவுக்கரசை ஆலங்குடி அரசு மருத்துவமனைக்கு செல்வதாக என்னிடம் கூறினார். நான் சென்று ஆலங்குடியில் எனது மகனை பார்த்தேன். என் மகனிற்கு காது, கை, கண், முழங்கால் ஆகிய

பகுதிகளில் அடிப்பட்டிருந்தது. அதன் பிறகு மருத்துவர்கள் மேல்சிகிச்சைக்காக கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு எழுதி கொடுத்தார்கள். எனது மகன் திருநாவுக்கரசை அழைத்துக்கொண்டு கும்பகோணம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்த போது மருத்துவர்கள் மேல்சிகிச்சைக்கு தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரைத்தார்கள். அதனடிப்படையில் 108 ஆம்புலன்ஸ் மூலம் அழைத்துச் சென்று தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தோம். அங்கு அவர் 20 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார். தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் நான் இருந்த போது அங்கு வந்த போலீசார் என்னை விசாரித்தார்கள். என் மகன் சுயநினைவு இல்லாமல் இருந்ததால் நான் போலீசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்பட்டும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம நான் கொடுத்ததுதான். **மேற்படி புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** -

நான் ஆட்டோ ஓட்டுநராக தொழில் செய்து வருகிறேன் என்றால் சரிதான். சாட்சி கோவிந்தராஜ் மற்றும் மணிகண்டன் ஆகியோர் என்னுடன் தான் ஆட்டோ ஓட்டுகிறார்கள் என்றால் கோவிந்தராஜ் மட்டும் ஆட்டோ ஓட்டுகிறார். மணிகண்டன் எனது தெருவை சேர்ந்தவர். அவர் ஆட்டோ ஓட்டவில்லை. புகார் வாக்குமூலத்தில் என்றைய தினம் மற்றும் எத்தனை மணிக்கு பெறப்பட்டது என்ற விபரம் இல்லை என்றால் சரிதான். குறிப்பாக எந்த நாளில் மருத்துவமனையிலிருந்து விடுவிப்பு செய்தார்கள் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. பொதுவாக மருத்துவமனையிலிருந்து காலையில் தான் விடுவிப்பு செய்வார்கள் என்றால் சரிதான். எனது மகன் திருநாவுக்கரசை காலை 10.00 மணிக்கு விடுவிப்பு செய்தார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தை எந்த போலீசார் பெற்றார் என்றோ, அவரது பெயரோ எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னிடம் மணிகண்டன் என்பவர் போன் செய்து தகவல் சொன்னார் என்று தற்சமயம்

பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள் நேரத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.04.06 14:39:33 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.